1972 சனவரி 28]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களுடைய பகுதிக்கு படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று கோருகிற உரிமை இருக்கிறது. இப்பொழுது உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கோருகிற உரிமை கனம் அங்கத்தினர்களுக்கு இருக்கிறது. ஆனல், அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட வசதி இல்லை.

காசநோய் மருத்துவ மனைகள்

*72 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை-செங்கிப்பட்டி காசநோய் மருத்துவ மனைக்கு 1970-71-ல் தமிழ்நாடு அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : செங்கிப்பட்டி காசநோய் மருத்துவ மனைக்கு 1970-71-ல் தமிழக அரசு வழங்கிய மானியத் தொகை ரூ. 37,920.81. அதன் விவரம் பின்வருமாறு—

1968-69-ஆண்டுக்காக	ரூ. 26, 920.81
1970-71-ஆண்டுக்கு முன்பணம்	ரூ. 11,000.00

*73 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் நடமாடும் காசநோய் மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, மதுரை மருத்துவ மனைக்கு காசநோயால் பீடிக்கப்பட்டவர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் கிராமங்களிலிருந்து தினசரி வருகிறுர்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்னுல் இடவசதிக்காக பதிவு செய்துகொண்டவர்களுக்குக்கூட இடம் கிடைக்காத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, இந்தக் குறையைப் போக்க நடமாடும் காசநோய் மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தி, கிராமங்களுக்குத் தினசரி சென்று நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, காசநோய் தடுப்புத் திட்டம் என்பது ஒவ்வொரு மருத்துவமனையோடும் தனிப்பட்ட முறையில் இணைக்கப்பட்டு செயலாற்றப்படுகிறது. நடமாடும் மருத்துவமனையாக இயங்குவதில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் காசநோய் தடுப்பக்கு இயங்கி வருகிற உந்து வண்டிகள் மூலமாக மாவட்ட அளவில் நடைபெறுகிறது. ஏதாவது

ஒரு கிராமத்தில் மக்களிடத்தில் இந்த நோய் அதிகமாக பரவி யிருக்கிறது என்றால், அது மாவட்ட டி.பி. ஆபீசருக்குத் தெரி விக்கப்படுமானால், அந்தப் பகுதியில் அதிகக் கவனம் செலுத்தி பல் வேறு பணிகள் செய்ய வழி செய்யப்படும்.

கோவை மாவட்டத்திலுள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள்

*74—வினா. திரு. என். மருதாசலம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை மாவட்டம் E.S.I. தலைமை ஆஸ்பத்திரியில் (சிங்காநல்லூர் வரதராஜ புரத்தில்) ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்கள் எழுதித்தரும் மருந்துகளை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் அங்கத்தினர் கூறும் வகையில் செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் கோயமுத்தூர் E.S.I. மருத்துவமனையில் உள்ளிருந்து மருத்துவ சிகிச்சை பெறும் பிணியாளர்களுக்கு மருத்துவமனை யிலிருந்தே தேவையான ஸ்பெஷலிஸ்ட் மருந்துகள் வழங்கப் படுகின்றன. வெளியில் இருந்துகொண்டு மருத்துவம் பெறும் பிணியாளர்களுக்கு வல்லுநர்கள் கூறும் மருந்துகள் அந்த அந்த மருந்தகங்களின் மூலம் வழங்கப்படுகின்றன.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கோவையில் ஈ.எஸ்.ஐ மருந்தகங்களில் டாக்டர்கள் எழுதிக்கொடுக்கும் மருந்துகள் கிடைக்காத குறைபாடு இருக்கிறது. ஆகவே, அந்தக் குறை பாட்டைப் போக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, அது பற்றி பரிசீலிக்கப்படும்.

*75 வினா—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் E.S.I. தலைமை ஆஸ்பத்திரியில் (சிங்காநல்லூர் வரதராஜபுரத்தில்) எலும்பு முறிவு கவனிக்கும் பிரிவில் நிரந்தரமாக ஸ்பெஷலிஸ்ட் டாக்டரை நியமிக்க அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நியமிக்கப்படுவார்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) கோயம் புத்தூர் E.S.I. மருத்துவமனையில் எலும்பு முறிவு (Orthopaedics) கவனிக்கும் பிரிவில், மருத்துவவல்லுநர் (நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 2–11–1971 அன்று மருத்துவமனையில் பணியேற்றுள்ளார்.